முழுப்பதிப்புரிமையுடையது[All Rights Reserved]

மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம் Provincial Department of Education, Northern Province

**மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்**
**Provincial Department of Education, Northern Province**

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மூன்றாம் தவணைப்பரீட்சை *2017***
**General Certificate of Education (Ord. Level)Third Term Examination, 2017**

| | | | | |
|---|---|---|---|---|
| **தொடர்பாடலும் ஊடகக்கல்வியும் I,II**<br>**Communication and MediaStudies I,II** | **87** | **T** | **I,II** | **மூன்று மணித்தியாலம்**<br>**Three Hours** |

**அறிவுறுத்தல்:**

1. எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
2. கணிப்பான்கள் பயன்படுத்த அனுமதி இல்லை.
3. பின்வரும் வினாக்களில் மிகவும் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்து விடைத்தாளில் புள்ளடியிடுக

## பகுதி I

1) தொடர்பாடல் செயற்பாடு ஒன்றின் அடிப்படை அம்சங்களின் தொடர் வரிசை யாது?
   i. தொடர்பாடுவர் - செய்தி – ஊடகம்
   ii. தொடர்பாடுவர் - பெறுநர் - செய்தி
   iii. தொடர்பாடுவர் - செய்தி – பெறுநர்
   iv. தொடர்பாடுவர் - ஊடகம் - பெறுநர்

2) நிறுவனமொன்றில் முகாமைத்துவச் செயற்பாடுகளினை மேற்கொள்வதற்கு பயன்படும் தொடர்பாடல் வடிவம்
   i. ஆட்களிடைத் தொடர்பாடல்
   ii. முறைசார் தொடர்பாடல்
   iii. வெகுசனத் தொடர்பாடல்
   iv. ஆளுள் அல்லது அகமுகித் தொடர்பாடல்

3) தொடர்பாடல் செயன்முறையில் உடனடியாக பின்னூட்டத்தினை பெற்றுக் கொள்ளக்கூடிய தொடர்பாடல்
   i. ஆளுள் தொடர்பாடல்
   ii. குழுத் தொடர்பாடல்
   iii. வெகுசனத் தொடர்பாடல்
   iv. ஆளிடை அல்லது ஆட்களிடைத் தொடர்பாடல்

4) கலங்கரை விளக்க உபாயமுறையை பயன்படுத்தி நடைபெறவேண்டிய தொடர்பாடல்
   i. குழுத் தொடர்பாடல்
   ii. ஆளுள் அல்லது அகமுகித் தொடர்பாடல்
   iii. ஆளிடை அல்லது ஆட்களிடைத் தொடர்பாடல்
   iv. வெகுசனத் தொடர்பாடல்

5) இன்றுள்ள காலகட்டத்தில் ஊடகங்கள் அனைத்தும் தனித்து இயங்குவதில் பயனில்லை எனும் தன்மையினை பிரதிபலிக்கும் ஊடக வெளிப்பாடு
   i. சமூக ஊடகம்
   ii. வெகுசன ஊடகம்
   iii. குடிசன ஊடகம்
   iv. இணைந்த ஊடகம்

6) கடதாசியை அறிமுகப்படுத்துவதில் செல்வாக்குச் செலுத்தும் அறிஞர்
   i. ஜோஹான்ஸ் குட்டன் பேர்த்
   ii. மோர்ஸ்
   iii. ட்சாயி லுன்
   iv. மார்க்கோணி

7) ஏதேனும் கூட்டம், மகாநாடு, அல்லது தகவலுக்காக விசேட நேக்கத்தை இலக்கு வைத்து தயாரிக்கப்பட்ட எழுத்துமூல ஆவணம்
   i. கட்டுரைகள்
   ii. அறிக்கைகள்
   iii. சுயவிவரக் கோவை
   iv. கடிதங்கள்

8) செய்தி தொடங்குபவரிடமிருந்து அவரால் தெரிவு செய்யப்பட்ட பலருக்கும் செய்தி பரிமாறப்படும் முறைசாரா தொடர்பாடல்
   i. கொத்தணிச் சங்கிலி மாதிரி
   ii. நிகழ்தகவு சங்கிலி மாதிரி
   iii. புறணி பேசுதல் சங்கிலி மாதிரி
   iv. தனிச் சங்கிலி மாதிரி

9) ஒரு இடத்தில் இருந்து உட்படுத்தப்படும் எழுதப்பட்ட தாளின் விபரங்களினை இன்னொரு இடத்தில் மூல ஆவணத்தில் உள்ள விடயங்களினை பிரதியாக பெற்றுக் கொள்ள உதவும் இயந்திரம்
   i. தொலைநகல் கருவி    ii. தொலைபேசி
   iii. பேஜர்    iv. நாணயக்கணக்கீட்டு இயந்திரம்

10) இலங்கையில் சைவசமய மறுமலர்ச்சிக்காக ஆங்கிலேயருடைய காலகட்டத்தில் இருந்து வெளியிடப்படுகின்ற பத்திரிகை
   i. உதய தாரகை    ii. இந்து சாதனம்
   iii. பாதுகாவலன்    iv. ஞானார்த்த பிரதீப

11) வாசகர் மட்டத்தில் அதிக தாக்கத்தினை ஏற்படுத்துகின்ற செய்தி அறிக்கையிடல்
   i. படைப்பாக்க அறிக்கையிடல்    ii. மென் செய்தி அறிக்கையிடல்
   iii. வன் செய்தி அறிக்கையிடல்    iv. புலனாய்வு அறிக்கையிடல்

12) செய்திப்பத்திரிகை, குழுவாகப் பணியாற்றுவதன் பெறுபேறாகும் எனினும் அதன் இறுதித் தீர்மானத்திற்கு பொறுப்பானவர்
   i. நிறுவனத் தலைவரிடம்
   ii. பிரதம ஆசிரியரிடம்
   iii. பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர்
   iv. ஆசிரிய பீடப் பணிப்பாளர்

13) இலங்கையில் வெளிவந்த முதல் சிங்கள சஞ்சிகை யாது?
   i. மாசிக தெக்க    ii. எவ்ரிசோ
   iii. வஜ்ர சூத்திரம்    iv. ஆனந்த விகடன்

14) "ரேடியோ சிலோன்" என அழைக்கப்பட்ட வானொலிச் சேவை எப்போது சிறிலங்கா வானொலிச் சேவை என பெயர் மாற்றம் பெற்றது.
   i. *1942*    ii. *1924*
   iii. *1972*    iv. *1978*

15) வகுப்பறை கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் போது ஆசிரியரால் பயன்படுத்தப்பட கூடிய எறிவைசார் ஊடக உபகரணம்
   i. கரும்பலகை    ii. வெண்பலகை
   iii. பக்கம் புரட்டி    iv. பல்லூடக சாதனம்

16) இலத்திரணியல் ஊடக வகைகள் கொண்ட தொகுதியை தெரிவு செய்க
   1– தொலைக்காட்சி, குறுஞ்செய்தி, பத்திரிகை
   2– மின்னஞ்சல், செய்திப்பத்திரிகை, தொலைக்காட்சி
   3– வானொலி, தொலைக்காட்சி, இணையம்
   4– தொலைபேசி, சஞ்சிகை, வானொலி

17) யுனஸ்கோ வரைவிலக்கணப்படி ஒரு புத்தகம் அவசியம் கொண்டிருக்க வேண்டிய பக்கங்களின் குறைந்தளவு எண்ணிக்கை
   i. *49* பக்கங்கள்    ii. *60* பக்கங்கள்
   iii. *75* பக்கங்கள்    iv. *47* பக்கங்கள்

18) ஊடக அறிக்கையிடல் நம்பகத் தன்மை பெரிதும் தங்கியிருப்பது
i. துல்லியம், நடுநிலைத்தன்மை, கவரும்தன்மை
ii. நடுநிலைத்தன்மை, எளிமை, கவரும் தன்மை
iii. துல்லியம், நடுநிலைத்தன்மை, தெளிவு
iv. தெளிவு, துல்லியம், சுருக்கம்

19) பின்வரும் கூற்றுக்களில் வானொலி ஊடகத்துடன் நேரடியாக தொடர்புபடாத கூற்று
i. கேட்டலும் பேசுதலும் சமநேரத்தில் நடைபெறும்
ii. புவியியல் வரையறைகளை கொண்டிருக்கும்
iii. எளிமையான மொழிப்பாவனை காணப்படும்
iv. கற்பனையாக்க சக்தி அதிகமான ஊடகம்

20) செய்திப்பத்திரிகையொன்றின் பெறுமதிளை பாதிக்காத காரணியை தெரிக.
i. தாக்கமும் முக்கியத்துவமும்
ii. சாதாரண தன்மை
iii. முரண்பாடுகள்
iv. அண்மித்த தன்மை

21) புகைப்பட துறையில் எண்மான (Digital) புகைப்பட கமராவின் தொழிற்பாட்டு அடிப்படையில் உள்ளடங்காதது.
i. கையாள்வது இலகுவானது
ii. செம்மையாக்கல் மேற்கொள்வது சுலபம்
iii. இலகுவாக கணனியுடன் தொடர்பை ஏற்படுத்த முடியாது
iv. பலவருடங்களின் பின்னும் புகைப்படம் தரங்குறையாது பாதுகாக்க முடியும்

22) தொடர்பாடலின் வகைகள் பிரிக்கப்படும் போது அதற்கு அடிப்படையாக அமைவது?
i. ஊடகங்களின் எண்ணிக்கை
ii. கால வரையறை
iii. தொடர்பாடலின் நோக்கம்
iv. பெறுநர்களின் எண்ணிக்கை

23) வானொலி ஊடகத்திற்கான பிரதியை எழுதும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய நிபந்தனை அல்லாதது
i. ஒலி அடிப்படை
ii. தொடர்பாடல்
iii. காட்சி அடிப்படை
iv. செவிமடுக்கும் அடிப்படை

24) A – வடிவத்தில் நீளமான பத்திரிகை
B – ஒப்பீட்டளவில் குறுகியன
C – வலுவான வெகுசன ஊடகம்
D – தேசிய பொதுத்தன்மை சார்ந்தது

மேற்குறித்த விடயங்களில் புரோட்சீட் பத்திரிகை வகைக்குரிய பண்புகளில் உள்ளடங்கும் தொகுதி.

i. A, C, D
ii. B, C, D
iii. A, B, C
iv. A, B, D

25) பிரதான ஒலிபரப்பு சேவைக்கு புறம்பாக பிரதேச ஒலிபரப்பு சேவை உருவாக்கப்பட்டது. இதில் முதலாவதாக உருவாக்கப்பட்ட பிரதேச சேவை எது?
i. ருஹீபுனு சேவை
ii. ரஜரட்ட சேவை
iii. மகாவலி ஒலிபரப்பு
iv. கிராந்துரு கோட்டை

26) மௌனசினிமாவினை தனது ஆற்றலினால் காட்சிப்படுத்துவிதில் உயர்பாராட்டினை பெற்ற படைபாக்க கலைஞர்
i. டெகியுரே
ii. ஜோர்ஜ் ஈஸ்ட்மன்
iii. சார்ளி சப்ளின்
iv. கமல்ஹாசன்

27) உலக தொலைக்காட்சி தினமாக ஐக்கிய நாடுகளின் மகாசபையினால் பிரகடனப்படுத்தப்பட்டு நடைமுறைப் படுத்தப்படும் தினம் எது?
i. நவம்பர் 21ஆம் திகதி
ii. மே 14ஆம் திகதி
iii. ஒக்ரோபர் 15ஆம் திகதி
iv. நவம்பர் 27ஆம் திகதி

28) ஊடக சுதந்திரத்தினை பெற்றுக் கொள்வதில் முன்னின்று உழைத்த சமூக வாதிகளை சரியாக அடையாளப்படுத்தும் தொகுதி
i. சீபேட், ஸ்ரூவேட்மில், வில்பர்ஷராம், தோமஸ் ஜெபர்சன்
ii. ஸ்ரூவேட் மில், வில்பர்ஷராம், தோமஸ் ஜெபர்சன், ஜோன்லொக்
iii. ஜோன் மில்டன், ஜோன் லொக், ஸ்ரூவேர்ட்மில், தோமஸ் ஜெபர்சன்
iv. ஜோன்லொக், லாஸ்வெல், ஸ்டுவேர்ட்மில், வில்பர்ஷராம்

29) ''தனது கருத்தை கூற வெளியிட சகல தனிநபருக்கும் உரிமை உண்டு பிறர் தடை இன்றி தம் கருத்தை வெளியிடவும் தேசஎல்லை கடந்து எந்த ஊடகம் வழியாகவும் தகவலை பெற வழங்க உரிமை உண்டு'' எனும் கூற்று உள்ளடக்கப்பட்டிருப்பது.
i. இலங்கை பத்திரிகை சபை சட்டத்தில்
ii. இலங்கை குடியரசின் அரசியலமைப்பில்
iii. மனித உரிமை சாசனத்தில்
iv. சொத்துரிமை சட்டத்தில்

30) கமரா ஒன்றில் கட்டாயமாக இருக்க வேண்டிய பிரதிகளில் உள்ளடங்காதது.
i. வில்லை
ii. எதிர்ப்படலம்
iii. வில்லைதூரம்
iv. துவாரப்படலை

31) வீதியால் நீங்கள் சென்று கொண்டிருக்கும் போது தீடிரென அபாய ஒலி எழுப்பிய வண்ணம் நோயாளர் காவு வண்டி உங்களை கடந்து சென்றது இங்கு நடைபெற்ற தொடர்பாடல் வடிவம் மற்றும் வகை
i. செவிப்புல தொடர்பாடல், ஆளிடைத் தொடர்பாடல்
ii. செவிப்புல தொடர்பாடல், ஆளுள் தொடர்பாடல்
iii. கட்புலத் தொடர்பாடல், குழுத் தொடர்பாடல்
iv. கட்புலத் தொடர்பாடல், ஆளிடைத் தொடர்பாடல்

32) இலங்கை அரசியலமைப்பு செயற்பாடுகளில் கடந்த வருடம் முதல் அமுல்படுத்தப்பட்டு வரும் ஊடக சுதந்திரத்துடன் தொடர்புடைய சட்டம் யாது?
i. மாகாணசபை எல்லை நிர்ணய சட்டம்
ii. போதைப் பொருள் எதிர்ப்புசட்டம்
iii. சனாதிபதி முறை நீக்கல் சட்டம்
iv. தகவல் பெறும் உரிமைச் சட்டம்

33) ஊடகத்தின் மீது பெறுநர்கள் அல்லது வாசகர்கள் தமது துலங்கல்களினை முன்வைக்க கூடிய முறைகள் கீழே தரப்படுகின்றன இவற்றுள் சரியானற்றை வெளிப்படுத்தும் தொகுதி

A. அஞ்சலட்டைகள்
B. தொலைபேசி அழைப்பு
C. குறுஞ் செய்திகள்
D. வாசகர் திருமுகம்

i. A, B, C  ii. B, C, D  iii. D, B, A  iv. A, B, C, D

34) 1. கோளமய வரையறை இல்லாமை
2. பெறுநரின் விருப்பத்திற்கேற்ப செய்திகளினை தெரிவு செய்திட இயலுமாதல்
3. கோள ரீதியாக பரவுகை நிகழ்ந்தமை
ஆகிய கூற்றுக்களுடன் தொடர்புடைய ஊடக வகைப்பாடு

i. அச்சு ஊடகம்  ii. புதிய ஊடகம்  iii. இலத்திரனியல் ஊடகம்  iv. மின் ஊடகம்

35) பிரசை ஒருவர் கொண்டிருக்க வேண்டிய பண்புகள் பல காணப்படுகின்றன. அவற்றுள் ஒரு சில கீழே தரப்டுகின்றன. இவற்றில் பொருத்தமில்லாத இயல்பு அல்லது பண்பு

i. சனநாயகவாதியாக வாழ்தல்

ii. சட்டத்தை மதித்தல்

iii. வாக்குரிமையை பயன்படுத்தாமை

iv. தேசாபிமானியாக வாழ்தல்

36) நூல் ஒன்றினை வெளியீடு செய்கின்ற போது பெற்றுக் கொள்ளப்படுகின்ற சர்வதேச தர நிர்ணய புத்தக இலக்கத்தினை குறிக்கும் ஆங்கில சுருக்கப்பதம்

i. ISPN ii. SLAS

iii. ISBN iv. SLSA

37) “சமூக ஊடக வலைப்பின்னல் தொடர்பாக வகுப்பறையில் நடைபெற்ற கலந்துரையாடலில் பலரும் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு

டட்சி : ஊடக சுதந்திரத்தின் வெளிப்பாடு
ஜான்சி : பிரதான ஊடகம் வெளிப்படுத்தாத விடயம் இதில் வெளிவரும்
தேவி : ஒருவருடைய அடையாளத்தினை காண்பிக்காமலே அடுத்தவரின் தோற்றப்பாடுகளினைசிதைப்பதற்கு பயன்படும்
றோசனா : இணைய ரீதியிலான வலைப்பின்னல் அவசியமற்றுத. மேற்குறித்த பங்கேற்பாளர்களின் மிகச்சரியான கருத்துக்களை முன்வைத்தார்கள்.

i. டட்சி, ஜான்சி, மற்றும் றோசனா

ii. டட்சி, தேவி, மற்றும் றோசனா

iii. றோசனா, தேவி, மற்றும் ஜான்சி

iv. டட்சி, தேவி, மற்றும் ஜான்சி

38) அதிகளவான நபர்களிற்கு ஒரே நேரத்தில் செய்திகள் தகவல்களினை பரிமாறக் கொள்ளும் தொடர்பாடல் வகை

i. ஆளுள் தொடர்பாடல் ii. குழுத்தொடர்பாடல்

iii. வெகுசனத் தொடர்பாடல் iv. ஆளிடைத் தொடர்பாடல்

39) பொதுசன அமைப்புக்களுக்கு சொந்தமான செய்திப்பத்திரிகைகள் கீழே தரப்படுகின்றன.

A - இந்து சாதனம்

B - ஞானார்த்த பிரதீப

C - சிங்கள பௌத்தயா

B - சிங்கள பலய

மேற்குறித்த பத்திரிகைகளும் தொடர்புபடும் பொதுசன அமைப்புக்களும்

i. A - சிங்கள மகாசபை, B - கத்தோலிக்க சபை C - மகாபோதி இயக்கம் D - சைவபரிபாலன சபை

ii. A - சைவபரிபாலன சபை B - கத்தோலிக்க சபை C - மகாபோதி D - சிங்கள மகாசபை

iii. A - சைவபரிபாலன சபை B - மகாபோதி இயக்கம் C - கத்தோலிக்க சபை D - சிங்கள மகாசபை

iv. A - மகாபோதி இயக்கம B - கத்தோலிக்க சபை C - சைவபரிபாலன சபை D - சிங்கள மகாசபை

40) பின்வரும் விடயங்களில் இலத்திரனியல் பத்திரிகையின் பொதுவான குணாம்சங்கள் சில கீழே தரப்படுகின்றன. அவற்றுள் பொருந்தாத அம்சம்

i. மீண்டும் மீண்டும் வாசிக்கும ் வசதி அற்றது.

ii. உடனடியாக செய்திளை தெரிந்து கொள்ளல்

iii. காலம் சென்றும் பாவனை செய்யமுடியும்

iv. உடனடியாக பாவனையாளரின் கருத்தாடல் இடம் பெறும்

முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

**மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்**

**Provincial Department of Education, Northern Province**

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மூன்றாம் தவணைப்பரீட்சை 2017**
**General Certificate of Education (Ord. Level) Third Term Examination, 2017**

| | | |
|---|---|---|
| **தொடர்பாடலும் ஊடகக்கல்வியும் I,II**<br>**Communication and MediaStudies I,II** | **87 \| T \| I,II** | **மூன்று மணித்தியாலம்**<br>**Three Hours** |

**அறிவுறுத்தல்:**

1. பின்வரும் வினாக்களில் **முதலாம்** வினா உட்பட ஏனைய **நான்கு**வினாக்களையும் உள்ளடக்கி எல்லமாக **ஐந்து** வினாக்களிற்கு விடைதருக.
2. முதலாம் வினாவிற்கு 20 புள்ளிகளும் ஏனைய வினாக்களுக்கு 10 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

## பகுதி II

1) "உமது பாடசாலையின் காலைப்பிரார்த்தனை கூட்டம் தினமும் மைதானத்தில் நடைபெறும். அதிபர் சில அறிவுறுத்தல்களினை மாணவர்களுக்கு வழங்கி கொள்வர். இதன் போது ஆசிரியர்களும் நல்ல சிந்தனைகளினை வழங்குவதோடு மாணவர்களுக்கும் சந்தர்ப்பமளிக்கப்படுகின்றது."

1) மேற்குறித்த செயற்பாடு எந்த வகை தொடர்பாடல் அடிப்படையில் நிகழும்?
2) மேற்குறித்த செயற்பாட்டின் போது பயன்படுத்தப்படக்கூடிய இரண்டு ஊடக உபகரணங்களினைக் குறிப்பிடுக?
3) மேற்குறித்த செயற்பாட்டில் இடையூறு ஏற்படக் கூடிய இரண்டு சந்தர்ப்பங்களினை குறிப்பிடுக.
4) உமது கல்லூரியின் காலைப்பிரார்த்தனை கூட்டத்தில் நடைபெறும் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தி அறிக்கைப்படுத்துக.
5) தினமும் ஒவ்வொரு வகுப்பு மாணவர்களும் காலைப்பிரார்த்தனை கூட்டத்தினை நடாத்துதல் வேண்டும் என அதிபரால் வகுப்பு மாணவர்களுக்கு அறிவித்தல் வழங்கப்பட்டது இதற்கென பயன்படுத்தப்பட கூடிய இரண்டு எழுத்து மூல ஆவணங்களினை குறிப்பிடுக.
6) வினைத்திறன் மிக்க பேச்சாளர் ஒருவர் கொண்டிருக்க வேண்டிய இயல்புகள் இரண்டினை குறிப்பிடுக.
7) காலைப்பிரார்த்தனை கூட்டம் ஒன்றில் பயன்படுத்தப்படும் வாய் மொழி சாராத ஏனைய தொடர்பாடல் வடிவங்களினை குறிப்பிடுக.
8) குழுத் தொடர்பாடல் வெற்றிக்கு பங்களிப்பு செய்யும் காரணிகள் இரண்டு தருக?
9) காலைப் பிரார்த்தனை கூட்டம் பற்றிய தகவல்கள் அன்றைய தினம் இரவு தொலைக்காட்சியில் செய்தியாக ஒளிபரப்பப்பட்டது.இச் செயன்முறையை பிரதிபலிக்கும் தொடர்பாடல் வகை யாது?
10) காலைப்பிரார்த்தனை கூட்ட விடயங்களினை அறிக்கைப்படுத்தும் போது பின்பற்றபட வேண்டிய நெறி முறைகளைத் தருக.

**(2x10= 20 புள்ளிகள்)**

2)

1) “இலங்கையின் முதன்முதலாக அச்சிடப்பட்ட செய்திப் பத்திரிகை இந்துசாதனம்”மேற்குறித்த கூற்றை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா? உங்கள் விடைக்கான காரணத்தினை தருக?

2) “எல்லா உத்வேகமான புதினங்களும் செய்திகளே” எனப்படுகின்றது மேற்குறித்த கூற்றை நீங்கள் ஏற்றுகொள்கிறீர்களா? உங்கள் விடைக்கான காரணத்தை தருக?

3) “ஒரு செய்தி முறையாகப் பெறுநருக்கு எடுத்துச் செல்லப்படுவதற்கு தலைகீழ் பிரமிட்முறை சிறந்தது” ஆகும். மேற்குறித்த கூற்றை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? உங்கள் விடைக்கான மூன்று காரணங்களினை குறிப்பிடுக.

4) “பத்திரிகை ஊடகத்தில் புகைப்படங்களினை இணைப்பது அனுகூலமான ஒன்று” மேற்குறித்த கூற்றை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா? உங்கள் விடைக்கான நான்கு காரணங்களினைத் தருக?

(1+2+3+4 = 10 புள்ளிகள்)

3)

1) தொடர்பாடல் செயலொழுங்கு நடைபெறும் தன்மைகளினை அடிப்படையாக கொண்டு அதனை வகைப்படுத்து?


2) தொடர்பாடலின் அடிப்டை செயற்பாடுகளில் நான்கினை குறிப்பிடுக.

3) தொடர்பாடலில் ஏற்படும் இரு கையான குறுக்கீடுகள்/தடைகளினை குறிப்பிட்டு சிறுவிளக்கம் தருக.?

4) வெகுசனத் தொடர்பாடலினை வகைப்படுத்தி அதன் இயல்களின் அடிப்படையில் விளக்குக.

(1+2+3+4 = 10 புள்ளிகள்)

4)




1) மேற்குறித்த வரிப்படம் ஷனொன் - வீவரால் உருவாக்கப்பட்ட தொடர்பாடல் சூத்திரம் எனின் x, y ஐப் பெயரிடுக.

2) தொடர்பாடல் x முக்கியம் ஆகும் இதன் வகைகளினை குறிப்பிடுக.

3) தொடர்பாடலில் y கொண்டிருக்க வேண்டிய திறன்களினை குறிப்பிட்டு விளக்குக?.

4) மேற்குறித்த தொடர்பாடல் சூத்திரத்திற்கு எதிராக தோற்றம் பெற்ற இருவழித் தொடர்பாடல் சூத்திரத்தினை வரைந்து ஒப்பீட்டு ரீதியில் விளக்குக.

(1+2+3+4 = 10 புள்ளிகள்)

5)

1) அலுவலக செயற்பாடுகளினை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்திக் கொள்வதற்கு ஊடக உபகரணங்கள் அவசியமாகும் அலுவலகத்தில் பயன்படுத்தப்படும் ஊடக உபகரணங்கள் சில தருக?
2) வகுப்பறை செயற்பாடுகளில் பயன்படும் ஊடக உபகரணங்கள் இரண்டினையும் வகைப்படுத்தி ஒவ்வோர் உதாரணம் தருக?
3) அலுவலக செயற்பாடுகளிற்கு இணையத்தளமொன்றினை பயன்படுத்திக் கொள்வதன் அனுகூலங்கள் மூன்றினை குறிப்பிடுக.
4) நிலைத்த புகைப்பட இதழியல் கலையினால் அச்சு ஊடகத்திற்கு கிடைக்கும் நன்மைகள் நான்கினை குறிப்பிட்டு விளக்குக.

(1+2+3+4 = 10 புள்ளிகள்)

6)

1) பத்திரிகை ஒன்றில் உள்ளடங்கும் விடயங்கள் எவை?
2) வாசகனுக்கேற்ப பத்திரிகையில் காணப்படும் விசேடம் / தன்மைகள் எவை?
3) வானொலி ஊடகத்தின் தன்மைகள்/இயல்புகளினை மூன்றிற்கு குறையாது பட்டியற்படுத்துக?
4) வானொலி ஊடகத்திற்குரிய நிகழ்ச்சிக்கு பிரதிகள் தொகுப்பாக்கம் செய்யும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் நான்கினை குறிப்பிட்டு விளக்குக?

(1+2+3+4 = 10 புள்ளிகள்)

7)

1) பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, சினிமா, இணையம் ஆகிய ஊடகங்களினை பெறுகை செய்வோரை அழைக்கும் விசேட பெயர்களினை குறிப்பிடுக.
2) தொலைக்காட்சி ஊடக நிகழ்ச்சிகளினை வகைப்படுத்துக?
3) விமர்சனமிக்க பெறுநரின் அல்லது ஊடக விமர்சகரின் பண்புகளை பட்டியற்படுத்துக?
4) வர்த்தக விளம்பரங்களின் தவறான பாதிப்புக்களினை குறிப்பிட்டு விளக்குக.

(1+2+3+4 = 10 புள்ளிகள்)

★★★★★